# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

**வகுப்பு - 7**

பதிவு எண் | | | | | | |

காலம்: 1.30 மணி

**தமிழ்**

மதிப்பெண்கள்: 30

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **2×1=2**

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ............

   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி

2. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று ............

   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** **2×1=2**

3. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ............
4. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் ............

**இ) பொருத்துக:** **4×½=2**

5. விரதம் - மேகம்
6. முகில் - கிளை
7. கொம்பு - ராஜமார்த்தாண்டன்
8. கொல்லிப்பாவை - நோன்பு

**ஈ) ஏதேனும் இரண்டனுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடையளி:** **2×2=4**

9. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
10. பேச்சுமொழி என்றால் என்ன?
11. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
12. கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள படிப்புகள் யாவை?

**உ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடையளி:** **1×4=4**

13. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாக உடுமலை நாராயணகவி கூறுவன யாவை?
14. புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**ஊ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:** **1×3=3**

15. 'அருள்நெறி அறிவைத் தரலாகும்' எனத் தொடங்கும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.

எ) **அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×1=3**

16. **தொகைச் சொல்லை விரித்து எழுதுக:**
    முத்தமிழ்
17. **இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக:**
    நீதிமன்றத்தில் தொடுப்பது ................
    'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு ...............
18. **பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக:**
    குழலி நடனம் ஆடியது.

ஏ) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** **1×5=5**

19. சொலவடைகள் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.
20. ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

ஐ) **கடிதம் / கட்டுரை எழுதுக:** **1×5=5**

21. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

22. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

<u>தாய்மொழிப்பற்று</u>

முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப்பற்று - தாய்மொழிப்பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை.

--------